[1982 மார்ச் 9

சாத்தனூர் அணைப்பகுதியைச் சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

* வினா எண் 425—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சாத்தனூர் அணையில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதை மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது செயல்படும்? இதனுடைய மதிப்பீடுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்து போக்குவரத்துக் கழகங்களின் நிதியிலேயிருந்து 3 லட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வட ஆற்காடு மாவட்டத்தை பொறுத்தவரையில் சாத்தனூர் அணை, ஏலகிரி மலை ஆக இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஏலகிரி மலையை இப்போது முதலில் அபிவிருத்தி செய்கிற பகுதியாக மேற்கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதற்குப் பிறகு சாத்தனூர் அணையில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையைக் கட்டும்போது சுற்றுலாப் பயணிகள் தங்கும் வசதிகளைப் பெற பொதுப்பணித் துறையினரால் சிறுசிறு வீடுகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் சிதிலமாகி விட்டன. பயணிகள் யாரும் இப்போது தங்குவது கிடையாது. அந்தக் கட்டிடங்களை சுற்றுலா வளர்ச்சியின்கீழ் எடுத்துக் கொண்டு நல்லமுறையிலே செப்பனிட்டு சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏற்ப செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை அமைக்கப்பட்ட போது பொதுப்பணித் துறையினரால் அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் காண்பதற்கு ஏற்ற வகையிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் எல்லாம் பொதுப்

1982 மார்ச் 9]

பணித் துறையின் நிர்வாகத்திலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபோது அவைகள் எல்லாம் தங்குவதற்கு வசதியற்ற நிலையிலே இருப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் அந்த வீடுகளை மேம்பாடு அடையச் செய்யவும் சுற்றுலாத் துறை பொதுப்பணித் துறைக்குத் தகவல் தரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் குறிப்பை பொதுப் பணித் துறைக்கு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையில் தண்ணீர் பிடிக்கிற நடுப்பகுதியில் மேடான ஒரு பாகம் இருக்கிறது. அதை மக்கள் சென்று பார்க்கிற வகையிலே—ஏற்கனவே கிருஷ்ணா நதியிலே இப்படி அமைத்திருக்கிறார்கள்—படகு போக்குவரத்து ஏற்படுத்திக் கொடுத்தால் அங்கிருக்கும் கல் வெட்டுகள் முதலியவற்றைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் அணை மக்கள் பாராட்டுகிற சுற்றுலாப் பகுதியாக அமைந்திருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே அந்தப் பகுதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்களை எல்லாம் அடிப்படையாக வைத்து மேலும் நல்ல பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அரசு பரிசீலனை செய்யும்.

கரும்பு வளர்ச்சிப்பணியினை மாற்றியமைக்கும் திட்டம்.

*வினா எண் 426—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மைத்துறை இயக்குநரிடமிருந்து சர்க்கரை உற்பத்தி இயக்குநருக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) கரும்பு வளர்ச்சிப் பணியை வேளாண்மை இயக்குநரிடமிருந்து சர்க்கரை இயக்குநருக்கு மாற்றுவது குறித்த செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து தற்போதுள்ள அமைப்பே தொடர்ந்து நீடிக்கலாம் என முடிவெடுத்துள்ளது.